7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

38. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து கல்வித் துறையின் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ந் தேதியிடப் பெற்ற 2358 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல் கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

39. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் தில் கல்வியாளர் குழு, ஆய்வு வாரியம் அமைப்பது குறித்து கல்வித் துறையின் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ம் தேதியிடப் பெற்ற 2402 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல் கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

40. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பணி (ஒழுக்கம்-மேல் முறையீடு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி - உள்ளாட்சித் துறையின் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் தேதியிடப் பெற்ற 643 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

41. சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத் திற்குச் சொந்தமான TMS 5035 ஆம் எண். பயணியர் பேருந் தைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து—I) துறையின் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் தேதியிடப் பெற்ற 493 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*14. 1980—81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 25, 45, 54 ஆகியவற்றிற்கான விரிவான மானியக் கோரிக்கைகள்.

*8-7-1980 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.